# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2477/43 - 2026 පෙබරවාරි මස 27 වැනි සිකුරාදා - 2026.02.27

*2477/43 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ.-12/2008

**2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் கே. எம். ஆனந்த விஜேபால ஆகிய நான், தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் விதப்புரையின் மேல், அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்களைக் கவனித்தல் மற்றும் அவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல் நோக்கத்துக்காக இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இடங்களை சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல் நிலையங்களாக இருப்பதற்கென, இக்கட்டளை மூலம் பெயர்குறிக்கின்றேன்.

**கே. எம். ஆனந்த விஜேபால,**
பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும்
பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2026, பெப்புருவரி 21.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல் நிலையங்கள்**

01 சிவில் பாதுகாப்பு பயிற்சி முகாம் - மிஹிந்தலை;
02 சிவில் பாதுகாப்பு பயிற்சி முகாம் - கல்பிட்டி;
03 சிவில் பாதுகாப்பு பயிற்சி முகாம் - பஹலலந்த, அம்பாறை;
04 இலங்கை பொலிசு பயிற்சிக் கல்லூரி - கல்லடி ;
05 கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தினுள் அமைந்துள்ள தொழில் திணைக்களத்தின் கட்டிட வளாகம்; அத்துடன்
06 இலங்கை விவசாயக் கல்லூரியின் இளங்கக்கோன் விடுதி - குண்டசாலை, கண்டி

EOG 02 - 0218

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது